

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

## மானியக் கோரிக்கை எண் : 42

## அறிவிப்புகள்
## 2026 – 2027

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## வறுமை ஒழிப்புத் திட்டங்கள் மற்றும் ஊரகக் கடன்கள்

### மானியக் கோரிக்கை எண் : 42

# அறிவிப்புகள்
# 2026 - 2027


## திரு. ச. ஜோசப் விஜய்

முதலமைச்சர்

# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் **15** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

## திரு. ச. ஜோசப் விஜய்

முதலமைச்சர்

**1. நடப்பாண்டில் சிறப்பாக செயல்படும் 1,000 சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகையாக "வெற்றிப் பெண்கள் சுய உதவிக் குழு விருது" வழங்கப்படும்.**

ஐந்து வருடங்கள் தொடர்ந்து ஊரகம் மற்றும் நகர்ப்புர பகுதிகளில் சிறப்பாக செயல்படும், 1,000 சுய உதவிக் குழுக்களுக்கு 1 இலட்சம் ரூபாய் வீதம் ஊக்கத் தொகையாக “வெற்றிப் பெண்கள் சுய உதவிக் குழு விருது” வழங்கப்படும். இத்திட்டமானது, சுய உதவிக் குழுக்களின் நிலைத்தன்மையை வலுப்படுத்துவதுடன், நிர்வாகத் தரத்தை மேம்படுத்தவும், உறுப்பினர்களிடையே நிதி ஒழுக்கத்தை மேலும் மேம்படுத்தவும் உதவுகிறது. நடப்பாண்டில் 10.30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இவ்விருது வழங்கப்படும்.

**2. மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை சர்வதேச சந்தைகளில் சந்தைப்படுத்தும் வகையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பிரத்யேகமான மின்னணு வணிகத் தளம் உருவாக்கப்படும்.**

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில்முனைவுத் திறனை வலுப்படுத்தவும், சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும், பாரம்பரிய இடைத் தரகர்களின் சார்பைக் குறைக்கவும், தேசிய மற்றும் உலகளாவிய நுகர்வோருடன் நேரடி சந்தை இணைப்பை ஏற்படுத்தவும், சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களுக்கென, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் ஒருங்கிணைந்த பிரத்யேகமான மின்னணு வணிகத் தளம் உருவாக்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 5,000 சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் மின்னணு வணிகத் தளங்களுடன் ஒருங்கிணைக்கப்படும்.

இதன் முதல் கட்டமாக, நடப்பாண்டில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

3. மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தலைமையிலான சுய உதவிக் குழு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் வழங்கும் சேவைகளுக்கு உறுதியான சந்தை வாய்ப்பை உருவாக்கும் வகையில், அரசு துறைகள் மற்றும் அரசு சார் நிறுவனங்களில், மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தலைமையிலான சுய உதவிக் குழு தொழில் நிறுவனங்களிடமிருந்து முன்னுரிமையில் கொள்முதல் மேற்கொள்ளப்படும்.

சுய உதவிக் குழு மகளிரால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களுக்கு உறுதியான சந்தை வாய்ப்புகளை உருவாக்கி, அவற்றின் நீண்டகால நிலைத்தன்மையை வலுப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் செயல்படும்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் மகளிர் தலைமையிலான சுய உதவிக் குழு தொழில் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் வழங்கும் சேவைகளுக்கான முன்னுரிமைக் கொள்முதல் கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

## 4. திருநர்களின் நலனுக்காக 3.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு விரிவானத் திட்டம் செயல்படுத்தப்படும்.

திருநர்களின் கண்ணியம், சமூக உள்ளடக்கம், சமத்துவம், உரிமைகளைப் பாதுகாக்கவும், சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்தவும் விரிவான பிரத்யேகமானத் திட்டம் 3.17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

## 5. ஊரகப் பகுதிகளில் உள்ள 6,800 சுய உதவிக் குழுக்களுக்கு 102 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள 6,800 சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, ஒரு குழுவிற்கு 1.50 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 102 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் கடனாக வழங்கப்படும்.

## 6. ஊரகப் பகுதிகளில் உள்ள 13,333 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக 20 கோடி ரூபாய் வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களை ஊக்குவிப்பதற்கு ஒரு காரணியாகவும், அவர்களின் சேமிப்போடு மூலதன நிதியை உயர்த்தி அதிகமான உறுப்பினர்கள் உள்கடன் மற்றும் வங்கிக்கடன் பெறுவதற்கும் 2026-27 ஆம் ஆண்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள 13,333 சுய உதவிக்குழுக்களுக்கு சுழல் நிதியாக 20 கோடி ரூபாய் வழங்கப்படும்.

**7. 111 வட்டாரங்களில் உள்ள 270 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகளுக்கு 33.33 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் செயல்பாட்டு மூலதனம் வழங்கப்படும்.**

சுய உதவிக் குழு பெண்களுக்கு ஆண்டு முழுவதும் நிலையான வருமானத்தை உறுதி செய்து, அவர்களை வேளாண் தொழிலாளர்களிலிருந்து வேளாண் தொழில் முனைவோர்களாக உருவாக்கும் நோக்கில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், பண்ணை அடிப்படையிலான வாழ்வாதார நடவடிக்கைகளை ஊக்குவித்து வருகிறது.

2026-27 ஆம் ஆண்டில், 111 வட்டாரங்களில் செயல்படுத்தப்படும் 270 ஒருங்கிணைந்த பண்ணையத் தொகுப்புகள் மூலம் 67,500-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு, கால்நடை வளர்ப்பு,

மீன்வளர்ப்பு, வேளாண் காடு வளர்ப்பு, உற்பத்திப் பொருட்கள் ஒருங்கிணைப்பு, மதிப்புக் கூட்டுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் ஆகிய துறைகளில் தொழில்முனைவோர் ஆவதற்கான தொழில்நுட்பப் பயிற்சியும், தேவையான நடைமுறை மூலதனமும் வழங்கப்படும். இத்திட்டம் 33.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது.

## 8. மகளிர் சுய உதவிக் குழுக்கள் நடத்தும் உணவகங்கள் 7.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில், அரசு கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், அரசு அலுவலகங்கள் மற்றும் அரசு நிறுவன வளாகங்களில், ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா இரண்டு உணவகங்கள் என்ற அடிப்படையில், மொத்தம் 74 மகளிர் சுய உதவிக் குழு உணவகங்கள், ஒரு உணவகத்திற்கு 10 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 7.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 9. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காக 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'மூலப்பொருள் ஆதரவு வங்கி' அமைக்கப்படும்.

உற்பத்தி மற்றும் சேவைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களின் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 'மூலப்பொருள் ஆதரவு வங்கி' அமைக்கப்படும். இதன் மூலம், குறைந்த அளவில் தொழில் மேற்கொள்ளும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், மூலப்பொருட்களை உரிய நேரத்தில் பெற்று, பெருமளவிலான கொள்முதல் ஆணைகளை நிறைவேற்றி, உற்பத்திச் செலவைக் குறைத்து, பொருட்கள் மற்றும் சேவைகளை காலக்கெடுவிற்குள் வழங்க இயலும்.

**10. 12,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு தொழில் மேம்பாடு மற்றும் மின்னணு வணிகத்திற்கான செயற்கை நுண்ணறிவு (AI) பயன்பாட்டுப் பயிற்சி 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

உற்பத்தி, தயாரிப்பு மற்றும் சேவைத் தொழில்களில் ஈடுபட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் தொழில் திறன் மற்றும் மின்னணு வணிகத் திறனை மேம்படுத்தும் வகையில், செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence - AI) பயன்பாடு குறித்த பயிற்சி வழங்கப்படும். இதற்காக, 1.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**11. சிறு தானியங்கள் மற்றும் ஊட்டச்சத்து மிக்க உணவு வகைகளைத் தயாரித்து விற்பனை செய்ய விரும்பும் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்கும் வகையில் 3.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 397 ஊட்டச்சத்து நிறுவனங்கள் அமைக்கப்படும்.**

பாரம்பரிய உணவு வகைகள் மற்றும் ஊட்டச்சத்து மிக்க சிறு தானிய உணவு வகைகளை தயாரிக்க விரும்பும் சுய உதவிக் குழுக்களை ஊக்குவித்து சமூக அளவில் இரத்த சோகையை கட்டுப்படுத்தும் நோக்கில் மாநிலம் முழுவதும் 397 ஊட்டச்சத்து நிறுவனங்கள் 3.97 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**12. 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மனநலம் காத்தல், மது மற்றும் போதை ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

இளைஞர்களின் செயல்திறனை ஊக்கப்படுத்தி வளர்க்கும் நோக்கில், 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மது மற்றும் போதை பொருட்கள் பயன்பாடு ஒழிப்பு உள்ளிட்ட, மனநலம் குறித்த விழிப்புணர்வு பயிற்சி 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**13. 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த விழிப்புணர்வு பயிற்சி 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

மாதவிடாய் சுகாதார மேலாண்மை குறித்த தேவையான புரிதலையும், தொடர்புடைய சுகாதார பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வையும், வளர் இளம் பெண்கள் மற்றும் மாணவிகளிடையே ஏற்படுத்த 10,000 பள்ளிகள் மற்றும் 1,000 கல்லூரிகளில் பயிலும் மாணவியருக்கு, 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மாதவிடாய் சுகாதார மேலாண்மை பயிற்சி வழங்கப்படும்.

**14. 50,000 இளைஞர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு மற்றும் சுயதொழில் வேலைவாய்ப்புகளுடன் கூடிய திறன் பயிற்சி 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

தீன்தயாள் உபாத்யாய கிராமபுற திறன் பயிற்சித் திட்டம் மற்றும் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனங்கள் மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு ஊதிய வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட, மொத்தம் 50,000 இளைஞர்களுக்கு 130 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திறன் பயிற்சி வழங்கப்படும்.

## 15. மாநிலம் முழுவதும் மாவட்ட அளவில் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.

மாநிலம் முழுவதும் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் நோக்கில், தொழில்துறை தேவைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், வேலை தேடும் இளைஞர்களையும், வேலை வழங்கும் நிறுவனங்களையும் ஒருங்கிணைக்கும் வகையில், மாவட்ட அளவில் 100 வேலைவாய்ப்பு முகாம்கள் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடத்தப்படும்.